தமிழ்Mirror
www.tamilmirror.lk
FREDAY, JULY 21 2023
வெள்ளிக்கிழமை ஜூலை 21, 2023 | ஒளி: 09 கதிர் 045 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

சுகாதார அமைச்சருக்கு எதிரான

# நம்பிக்கையில்லா பிரேரணை கைச்சாத்து

**25 எம்.பிக்களுடன் கஜேந்திரனும் கையெழுத்திட்டார்**

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையில் 25 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையொப்பமிட்டுள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான குமார வெல்கம, அனுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட அரசாங்க சார்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனும் தமது கட்சி சார்பில் பிரேரணையில் கையொப்பமிட்டுள்ளார். தொடர்ச்சி P2



## மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியாவுக்கு எடுத்துரைப்பார் ஜீவன்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைச்சர் ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினர் இந்தியா நோக்கி, வியாழக்கிழமை (20) புறப்பட்ட நிலையில், அங்கு முக்கியத்துவமிக்க சந்திப்புகளை நடத்தவுள்ளனர்.

இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி அம்மையார், பிரதமர் நரேந்திர மோடி, வெளிவிவகார அமைச்சர் கலாநிதி. சுப்பிரமணியம் ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் உள்ளிட்ட உயர்மட்ட பிரமுகர்களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேச்சு நடத்தவுள்ளார். இந்த பேச்சுகளில் அமைச்சர் ஜீவன் தொண்டான் உள்ளிட்ட இலங்கை தூதுக்குழுவினரும் பங்கேற்கவுள்ளனர். தொடர்ச்சி P2

## திறைசேரிக்கு 1.5 பில். வழங்குகிறது லிட்ரோ



லிட்ரோ நிறுவனம் 1.5 பில்லியன் ரூபாய் தேறிய இலாபத்தினை திறைசேரிக்கு வழங்கப்படவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள லிட்ரோ நிறுவனத்தின் தலைமையகத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

எரிவாயு விலையை குறைப்பதன் மூலம் மக்களுக்கு சலுகைகளை வழங்கும்போது கிடைக்கும் சிறிய இலாபத்தின் ஒரு பகுதி, நிறுவனத்தின் தொடர்ச்சி P2

பிரத்தியேக வகுப்புகளை

## வெள்ளி, ஞாயிறு நடத்தினால் நடவடிக்கை

**யாழ். மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை**



எஸ் தில்லைநாதன்

யாழ். மாவட்டத்தில் வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புகள் நடத்த தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் விதிகளை மீறி நடப்பவர்களுக்கு எதிராக தொடர்ச்சி P2

## வரலாற்றில் முதல் முறை




ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடன் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் இணைந்துள்ளதால் சாந்தனி விஜேவர்தன ஜனாதிபதியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

வியாழக்கிழமை (20) முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதியின் செயலாளர் நாடு திரும்பும் வரை இது அமுலில் இருக்கும் என்றும் ஜனாதிபதி பதில் தொடர்ச்சி P2

## டில்மா தேயிலையின் ஸ்தாபகர் காலமானார்

**இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கு டில்மா 2001 ஆம் ஆண்டில் அனுசரணை வழங்கியது**




டில்மா தேயிலையின் ஸ்தாபகரும் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான தேசமான்ய மெரில் ஜே பெர்னாண்டோ தனது 93ஆவது வயதில் காலமானதாக அவரது குடும்பத்தினர் அறிவித்துள்ளனர்.1930 ஆம் ஆண்டு நீர்கொழும்பில் பிறந்த பெர்னாண்டோ, தொடர்ச்சி P2



## வலுப்பெறுகிறது அமெரிக்க டொலர்

இலங்கை மத்திய வங்கியினால் வியாழக்கிழமை (20) வெளியிட்ட நாணய மாற்று விகிதத்தின்படி அமெரிக்க டொலரின் கொள்வனவு மற்றும் விற்பனை விலைகள் மேலும் அதிகரித்துள்ளன. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 316 ரூபாய் 30 சதமாகவும் விற்பனை விலை 330 ரூபாய் 29 இலங்கை சதமாகவும் பதிவாகியுள்ளது. தொடர்ச்சி P2

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் பேச்சுவார்த்தை வெற்றி

இலங்கைப் பிரதிநிதிகளுக்கும், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி உரிமையாளர்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளது.

சட்டமா அதிபர் தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகளுக்கும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதியாளர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை சிங்கப்பூரில் ஜூலை 18ஆம் 19 ஆம் திகதிகளில் நடைபெற்றது.கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் தீப்பிடித்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலினால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு கோரி, தொடர்ச்சி P2





## மதுரை – யாழ்ப்பாணம் இடையே விமான சேவை

மதுரை - யாழ்ப்பாணம் இடையில் விரைவில் விமான சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதற்காக இந்தியாவிலுள்ள தனியார் விமான சேவை நிறுவனங்களுடன் இலங்கையின் விமான சேவைகள் அமைச்சு பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ச்சி P2

## இந்தியா பறந்தார் ஜனாதிபதி; பொறுப்புகள் பகிர்ந்தளிப்பு



**பதில் அமைச்சர்களாக ஐவர் நியமனம்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரு நாள் உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு புதன்கிழமை (20) இந்தியா சென்றுள்ள நிலையில், ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கின்ற காலப்பகுதியில், தொடர்ச்சி P2

## எரிபொருள் ஒதுக்கீடு அடுத்தமாதம் கூடும்



மதிப்பீட்டின் பின்னர் அடுத்த மாதம் எரிபொருள் ஒதுக்கீடு மேலும் அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, வியாழக்கிழமை (20) வெளியிட்ட தனது டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

அடுத்த 6 மாதங்களுக்கான எரிபொருள் திட்டம் மற்றும் விநியோகம் குறித்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் போது அவர் இந்த கருத்துக்களை தெரிவித்தார். தொடர்ச்சி P2



பொருளாதார நெருக்கடியால்

## தொழில் இழந்தோருக்கு மீண்டும் தொழில்

பொருளாதார நெருக்கடியால் தொழில்களை இழந்தவர்களை மீண்டும் தொழிலில் அமர்த்துவதற்கான புதிய செயற்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க ஆகியோரின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் புதன்கிழமை (19) நடைபெற்ற கலந்துரையாடலின்போது மேற்படி குழு நியமிக்கப்பட்டது. தொடர்ச்சி P2

## அடுத்த வாரம் முதல் புதிய மரண சான்றிதழ்

ஷேன் செனவிரத்ன

நபரொருவர் மரணமடைந்ததன் பின்னர், திடீர் மரண பரிசோதகரால் இதுவரையிலும் வழங்கப்பட்ட மரண சான்றிதழுக்கு பதிலாக, சர்வதேச தரம் வாய்ந்த புதிய மரண சான்றிதழ் அடுத்த வாரம் முதல் வழங்கப்படும் என்று தெரிவித்த இலங்கை திடீர் மரண தொடர்ச்சி P2



## கனவிலும் நினைக்க வேண்டாம்

**சுயதொழிலை உருவாக்குவதும், ஏழைகளை தனித்து நிற்க ஊக்குவிப்பதும் ஆகும்**

ஆய்வின் அடிப்படையில் திட்டமிடப்பட்ட சமுர்த்தி வேலைத் திட்டத்தை பலவீனப்படுத்தவும் இடைநிறுத்தவும் அரசாங்கம் செயற்படாது எனவும் சமுர்த்தி திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கு சமுர்த்தி அதிகாரிகளின் ஆதரவு பெருமளவில் கிடைத்து வருவதாகவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# நம்பிக்கையில்லா பிரேரணை கைச்சாத்து

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களும் கையெழுத்திட்டுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தியும் டலஸ் அழகப்பெரும தலைமையிலான எதிர்க்கட்சி குழுவும் பிரேரணைக்கு ஆதரவளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தரமற்ற மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை பொறுப்பற்ற முறையில் இறக்குமதி செய்து, சுகாதாரத் துறையை நலிவடையச் செய்து உயிரிழப்புகள் ஏற்படுதலுக்கு காரணமாக அமைதல் என்பனவற்றை காரணமாக் கொண்டு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தது.

அண்மைய காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தியதால் எமது நாட்டின் மருத்துவமனை கட்டமைப்பில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் நிகழ்ந்தன.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ச்சியாக அரசாங்கத்திற்கு அறிவுறுத்திய போதிலும், அதைப் பொருட்படுத்தாது அவசர நிலை எனக் கருதி கொள்முதல் மற்றும் பதிவு செயல்முறைக்கு புறம்பாக மருந்துப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதோடு, இதனால் நாட்டின் பல முக்கிய மருத்துவமனைகளில் உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

## டில்மா தேயிலையின் ஸ்தாபகர் காலமானார்

தேயிலைக்காக தனது வாழ்நாளை அர்ப்பணித்தார்.

தேயிலை ருசிக்க கற்றுக்கொண்ட அவர், 1950 இல் இலங்கை தேயிலை கட்டுப்பாட்டாளரின் ஆலோசகர் மற்றும் ஏப் ஜோன்ஸ் அண்ட் கோ நிறுவனத்தில் தேயிலை உதவியாளராக பணியாற்றினார்.

ஏப் ஜோன்ஸ் அன்ட் கோவில் இருந்து 1962இல் இராஜினாமா செய்த அவர், ரஷ்யா, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாப்பிரிக்கா, லிபியா, எகிப்து மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு தேயிலை ஏற்றுமதி செய்தார்.

1985 இல், இலங்கையின் முதல் மதிப்பு கூட்டப்பட்ட சிலோன் தேயிலை வர்த்தக நாமமான "டில்மா" அறிமுகப்படுத்தப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் டில்மா இலங்கை தேசிய கிரிக்கெட் அணிக்கும் அனுசரணை வழங்கியது.

## எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம் பேச்சுவார்த்தை வெற்றி

இலங்கை அரசாங்கம் கடந்த ஏப்ரல் மாதம் சிங்கப்பூரில் தாக்கல் செய்த வழக்கை அடுத்து, தமது கட்சிக்காரர் சார்பில் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் இந்த கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

குறித்த சம்பவத்தின் முக்கிய விடயங்கள் மற்றும் அதனால் ஏற்பட்ட விளைவுகள் குறித்து இரு தரப்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, மீன்பிடி அமைச்சு ஆகியவை சமர்ப்பித்த இடைக்கால நட்டஈடு மதிப்பீடு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை மதிப்பீடு உடனடியாக மேற்கொள்ளப்படும் என கப்பல் உரிமையாளரின் காப்புறுதியாளர்கள், இலங்கைப் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தனர்.

இலங்கை கடற்பரப்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சிதைவுகளை அகற்றும் பணியை நிறைவு செய்ய வேண்டியதன் அவசியத்தை சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் வலியுறுத்திய நிலையில் இதற்கும் காப்புறுதி உரிமையாளர் தரப்பில் சாதகமான பதில் கிடைத்துள்ளது.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் இலங்கை கடல் சூழலுக்கு ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு வழங்குமாறு இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு கப்பலின் உரிமையாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் சாதகமான பதில்களை வழங்கியுள்ளமை விசேட அம்சமாகும். எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பில் மேலும் கலந்துரையாட அவர்கள் உடன்பாடு தெரிவித்துள்ளனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீ விபத்தினால் ஏற்பட்ட சேதத்திற்கு இழப்பீடு கோரி இலங்கை அரசாங்கம், சிங்கப்பூரில் ஏற்கனவே ஆரம்பித்துள்ள சட்ட நடவடிக்கைகளுக்கு, இந்தப் பேச்சுக்கள் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

## கனவிலும் நினைக்க வேண்டாம்

2022-2024 ஆம் கல்வியாண்டுகளுக்கான கல்விப் பொதுச் சான்றிதழ்களின் உயர்தரப் பரீட்சைக்கு பயிலும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு மினுவாங்கொடை பிரதேச செயலகத்தில் வியாழக்கிழமை (20) இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் வறுமையை ஒழிப்பதற்காக திருமதி சந்திரிகாவின் காலத்தில் சமுர்த்தி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பிறகு ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் சமுர்த்தி திட்டத்தை மிக வலுவாக தொடர்ந்தது. சமுர்த்தி திட்டத்தின் ஒரே நோக்கம் மக்களை சேமிப்பதை ஊக்குவிப்பதும், புதிய நிரந்தர வருமானத்தை உருவாக்குவதும், குறிப்பாக சுயதொழிலை உருவாக்குவதும், ஏழைகளை தனித்து நிற்க ஊக்குவிப்பதும் ஆகும்.

ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசும் இலவச சுகாதாரம், இலவசக் கல்வி, சமுர்த்தி வேலைத் திட்டம் என்று ஏராளமான பணத்தைச் செலவிடுகிறது.

## தொழில் இழந்தோருக்கு மீண்டும் தொழில்

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையிலான மேற்படிச் செயற்குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக கல்வி அமைச்சு, நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, சுற்றுலாத்துறை அமைச்சு, மீன்பிடித்துறை அமைச்சு, போக்குவரத்து அமைச்சு, பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சு, கைத்தொழில் அமைச்சு உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்குகின்றனர்.

பொருளாதார நெருக்கடியினால் தொழில்களை இழந்தவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பிரதமராக இருந்த காலப்பகுதியில் இருதரப்பு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது.

அக்குழுவினால் தொழில்களை இழந்தவர்களுக்கு மீண்டும் தொழில்களை பெற்றுக்கொடுப்பதற்கான மூலோபாய திட்டமிடலொன்று தயாரிக்கப்பட்டிருந்த நிலையில், அதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்கள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சிடம் கையளிக்கப்பட்டது.

அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அவசியமான தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுத்தருமாறு உலக தொழிலாளர்கள் அமைப்பிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், உலக தொழிலாளர்கள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தொடர்பிலான இறுதி அறிக்கையும் அமைச்சிடம் சமர்பிக்கப்பட்டிருந்தது.

## திறைசேரிக்கு 1.5 பில். வழங்குகிறது லிட்ரோ

தாய் நிறுவனமான இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் ஊடாக இலாபத்தின் உரிமையாளரான அரசாங்கத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இந்தப் பணத்தை அரசு நிவாரணத் திட்டத்துக்கோ, அரசு ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கோ அல்லது எதற்கும் பயன்படுத்தினாலும், அந்தப் பணம் அதன் உண்மையான உரிமையாளர்களான மக்களுக்கே திரும்பக் கிடைக்கும் என்றார்.

## வலுப்பெறுகிறது அமெரிக்க டொலர்

கடந்த வெள்ளிக்கிழமை (14) இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய, டொலரொன்றின் கொள்வனவு விலை 310 ரூபாய் 49 சதமாகவும், விற்பனை விலை 324 ரூபாய் 67 சதமாகவும் பதிவாகியிருந்தது

இதேவேளை, கொழும்பு பங்குச் சந்தையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 11 ஆயிரம் புள்ளிகளைத் தாண்டியது.

வியாழக்கிழமை (20) வர்த்தக நாள் முடிவில் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் 11,026.83 புள்ளிகளில் நிறைவடைந்ததுடன், முந்தைய நாளை விட 0.91% அதிகரிப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தமாக 156 மில்லியனுக்கும் அதிகமான பங்குகள் வர்த்தகம் செய்யப்பட்டு, பங்குச் சந்தையின் மொத்தப் புரள்வு 4.17 பில்லியன்களாக பதிவாகியுள்ளது.

## வரலாற்றில் முதல் முறை

செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும் என்றும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட அரச அதிகாரியான சாந்தனி விஜேவர்தன தற்போது ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.

1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட திருமதி விஜேவர்தன, திறைசேரியில் 22 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்து வந்ததோடு இறுதியாக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார்.

## வெள்ளி, ஞாயிறு நடத்தினால் நடவடிக்கை

நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இந்த சந்திப்பின்போது, வெள்ளி, ஞாயிறு தினங்களில் வகுப்புகளை நிறுத்த ஒத்துழைப்பு வழங்குகிறோம். ஞாயிற்றுக்கிழமைகளில் மதியத்துக்கு பின்னர் வகுப்புகளை நடத்த அனுமதிக்குமாறு கோரப்பட்டது.

அத்துடன், சாதாரண தர பரீட்சைக்கான தயார்ப்படுத்தல் தரம் 9இல் ஆரம்பிப்பதால் இந்த திட்டத்தால் அந்த மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என்று தனியார் கல்வி நிலைய உரிமையாளர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், தாங்கள் வகுப்புகளை நிறுத்திய நிலையில் பிரத்தியேக வகுப்புகள் நடைபெறுகின்றன என்றும் முறையிட்டனர்.

வாரத்தின் ஏழு நாட்களும் தொடர்ச்சியாக கற்றலில் ஈடுபடுவதால் மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் உளப்பாதிப்பை குறைக்கவும் அறநெறிக் கல்வியை ஊக்குவிக்கவுமே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன், விதிமுறைக்கு கட்டுப்படாமல் பிரத்தியேக வகுப்புகள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அரச அதிபர் இதன்போது உறுதியளித்தார்.

## இந்தியா பறந்தார் ஜனாதிபதி; பொறுப்புகள் பகிர்ந்தளிப்பு

அவரின் கீழுள்ள அமைச்சுக்களின் பொறுப்புக்கள் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி மற்றும் பொருளாதர நிலைப்படுத்தல், தேசிய கொள்கைகள் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, பதில் ஏற்றுமதி ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும், தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், பதில் இராஜாங்க அமைச்சராகவும், சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பதில் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

> **ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழு புதுடெல்லியை நேற்று (20) மாலை சென்றடைந்தது**

ஜனாதிபதியின் இந்த விஜயத்தின் போது இந்திய குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் ஏனைய இராஜதந்திரிகளையும் சந்தித்து இரு தரப்பினருக்கும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான நீண்ட கால உறவை மேலும் மேம்படுத்தும் வகையில் ஜனாதிபதியின் இந்த விஜயம் அமையுமென வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மதுரை - யாழ்ப்பாணம் இடையே விமான சேவை

குறித்த விமான சேவையை வாரத்திற்கு 7 நாட்களும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள ப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுரை - கொழும்பு இடையேயான முதலாவது சர்வதேச விமான சேவை 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

தற்போது மதுரையிலிருந்து நாளாந்தம் கொழும்பிற்கான நேரடி விமான சேவையை ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் ஒதுக்கீடு அடுத்தமாதம் கூடும்

எரிபொருள் இறக்குமதித் திட்டங்கள், சுத்திகரிப்புச் செயற்பாடுகள், சுத்திகரிப்பு நிலைய மேம்படுத்தல் முன்மொழிவுகள், கியூஆர் ஒதுக்கீடுகள், சேமிப்புத் திறன், பங்கு தானியங்கு இயந்திரம், எரிபொருள் நிலையங்களுடனான ஒப்பந்தங்கள், விநியோகம் என்பனவும் இந்த சந்திப்பின் போது மீளாய்வு செய்யப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

## அடுத்த வாரம் முதல் புதிய மரண சான்றிதழ்

பரிசோதகர்கள் சங்கம், இதற்கான தீர்மானத்தை நீதியமைச்சு எடுத்துள்ளது என்றது.

அந்த சங்கத்தின் தலைவர் அனுர ஹேரத், பேராதனை போதனா வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் வியாழக்கிழமை (20) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மரணம் நிகழ்ந்தமைக்கான காரணத்தை மட்டுமே குறிப்பிட்டு இதுவரையிலும் பீ-8 படிவத்தின் கீழ் வழங்கப்பட்ட மரண சான்றிதழுக்கு பதிலாக, மரணத்துக்கான காரணங்கள் நான்கின் கீழ், 24 காரணங்களை குறிப்பிட்டு புதிய மரண சான்றிதழ் வழங்கப்படும்.

நோயாளி கொடுத்த வைத்திய தகவல்கள், நோயாளர் தொடர்பிலான தகவல்கள், உறவினர்கள் குறித்த விபரங்கள் அதில் அடங்கும். இது சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமனங்களுக்கு ஏற்ப உள்ளமை விசேட அம்சமாகும்.

இலங்கையில் மரண பரிசோதகர் நியமனத்தில் காலாவதியான கோறளை முறைமையை இல்லாதொழித்து அடுத்த வாரம் முதல் 331 பிரதேச செயலகங்களுக்கும் தலா ஒரு மரண விசாரணை அதிகாரியை நியமிக்க நீதி அமைச்சு தீர்மானித்துள்ளதாக அகில இலங்கை மரண விசாரணை அதிகாரி சங்கம் தெரிவித்துள்ளது.

## மலையக மக்களின் பிரச்சினைகளை இந்தியாவுக்கு எடுத்துரைப்பார் ஜீவன்

இலங்கை தூதுக்குழுவில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக மக்களின் பிரச்சினைகள், கோரிக்கைகள் சம்பந்தமாக இந்திய தரப்புக்கு எடுத்துரைக்கவுள்ளார்.

மலையக தமிழர்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், அவர்களை கௌரவப்படுத்தும் வகையில் அரச அங்கீகாரத்துடன் தேசிய மட்ட நிகழ்வு எதிர்வரும் நவம்பரில் நடத்தப்படவுள்ளது. இது சம்பந்தமாகவும், இந்நிகழ்வில் இந்திய பிரதிநிதி பங்கேற்பதற்கான அழைப்பும் ஜீவன் தொண்டமானால் கையளிக்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

அத்துடன், இந்தியாவின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படவுள்ள 10 ஆயிரம் வீட்டு திட்டம், மலையக பல்கலைக்கழக விவகாரம், மலையக மாணவர்களுக்கான இந்திய புலமைப்பரீசில்களை அதிகரித்துக்கொள்ளல் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகவும் இந்திய தரப்புடன் கலந்துரையாடுவதற்கு ஜீவன் தொண்டமான் ஈடுபட்டுள்ளார். அவர் பிரத்தியேக சந்திப்புகளிலும் ஈடுபடுவார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, கொந்தளிப்பு நிலையில் உள்ள இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சம்பந்தமாகவும் இலங்கை, இந்திய தரப்புகள் பேச்சு நடத்தவுள்ளன. மீனவர் பிரச்சினை சம்பந்தமாக தமிழக முதல்வர் விடுத்துள்ள கோரிக்கை கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்று இந்தியா செல்வதற்கு முன்னர் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பொலிஸார் தவறு செய்தால் அறிவிக்கவும்

க.அகரன்

பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் தவறுகள் குறித்து தனக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொண்ட வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் C.P விக்கிரமசிங்க, அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் ஊடகவியலாளர்களுக்குமான விசேட கலந்துரையாடல், அத்தியட்சகரின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துரைத்த அவர்,



வவுனியா மாவட்டத்தில் பல பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களின் பல முறைப்பாடுகளை ஏற்க பொலிஸார் மறுக்கின்றனர்.

அதேவேளை, திருட்டு சம்பவங்கள் பற்றி பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிடும்போதும் ஒரு சில பொலிஸார் அதன் உண்மையான பெறுமதிகளை மறைத்து தவறான பெறுமதிகளை முறைப்பாட்டில் பதிவதாகவும் எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

இவ்வாறு செயல்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது தாம் கடுமையான நடவடிக்கை எடுப்பதாகவும் இது போன்ற சம்பவங்கள் வவுனியாவில் இடம்பெற்றால் பொதுமக்கள் உடனடியாக தமக்கு அறியப்படுத்துமாறும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் தன்னை எந்த நேரத்திலும் அழைக்க முடியும் என்றும் 071-8591340 குறித்த அலைபேசி ஊடாக தகவல்களை நேரடியாக தனக்கு அறிவிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தனியார் பேருந்து சாரதி, நடத்துனர் மீது தாக்குதல்

எம்.றொசாந்த்




யாழ்ப்பாணம் , மானிப்பாய் - காரைநகர் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்தின் மீதும்,அதன் சாரதி மற்றும் நடத்துனர் மீதும் புதன்கிழமை இரவு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காரைநகர் - மானிப்பாய் வீதியில் குறித்த பேருந்து பயணித்துக்கொண்டிருந்த வேளை பேருந்தினை-வழிமறித்த இனம்தெரியாத-குழுவொன்று பேருந்தின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி , சாரதி மற்றும் நடத்துனர் மீது தாக்குதல் நடாத்தியுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் காரைநகர் சிற்றூர்தி சங்கத்திற்கு அறிவித்துள்ளனர். அத்துடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

## முன்னோடி செயலமர்வு

யது பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தல் பணிக்கான அலுவலர் கணக்கெடுப்பிற்காக உருவாக்கப்பட்டுள்ள இ.தரவு பத்திரத்தை (e.Staffing) பூரணப்படுத்தல் தொடர்பான முன்னோடி செயலமர்வு வியாழக்கிழமை(20) இடம்பெற்றது.

குறித்த முன்னோடி செயலமர்வு கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. ஆர்.சி அமல்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

இதனூடாக இணைப்பு அலுவலரை நியமித்து, அவர்களூடாக



உத்தியோகத்தர்களை நியமித்து, குறித்த தகவல்கள் இலத்திரனியல் மயப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்கில் கேரளா கஞ்சா மீட்பு



யாழ்ப்பாணம் , வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில், சுமார் 11 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவை இன்றைய தினம் புதன்கிழமை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வெற்றிலைக்கேணி கடற்படை முகாமை சேர்ந்த கடற்படையினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது மாமுனை பகுதியில் கைவிடப்பட்ட 18 பொதிகளில் இருந்து 35 கிலோ 900 கிராம் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மீட்கப்பட்ட கஞ்சாவை கடற்படை முகாமில் வைத்துள்ள கடற்படையினர், மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.



## வைத்தியசாலையில் கடை திறந்து வைப்பு

எப்.முபாரக்

திருகோணமலை பொது வைத்தியசாலையில் வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் நோயாளர்களின் நலன் கருதி நலன்புரி (20) கடையொன்று வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் தலைவர் தயானந்த ஐயவீர,மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் இணைந்து திறந்து வைத்தனர்.

## ஆளுநர் தலைமையில் பாதுகாப்பு சபை கூட்டம்

திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில், ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் கிழக்கு மாகாண பாதுகாப்பு சபைக் கூட்டம் வியாழக்கிழமை (19) நடைபெற்றது.

இக்கூட்டத்தில்,சட்டம் ஒழுங்கு, சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பு, சட்டவிரோத போதைப்பொருள் விநியோகம், சட்டவிரோத மீன்பிடித்தல், சுற்றுச்சூழலுக்கு எதிரான செயற்பாடு, மனித கடத்தல், மான் பூங்காக்கள் மீதான கண்காணிப்பு, கிழக்கு மாகாணத்தின் தற்போதைய



நிலைமை மற்றும் எதிர்காலத் திட்டங்கள் குறித்து பிரதிப் பொலிஸ் மா அதிபர், கிழக்கு மாகாண இராணுவத் தளபதி, கிழக்கு மாகாணத்தின் கடற்படை ரியர் அட்மிரல், கிழக்கு மாகாணத்தின் விமானப்படை தளபதி ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

## தகாத உறவால் பணம், நகைகளை இழந்த பெண்

பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட்டிருந்த 23 வயது இளைஞன், குறித்த பெண்ணின் நிர்வாண புகைப்படங்களை அவரின் கணவனுக்கு அனுப்புவதாக மிரட்டி, பெண்ணிடம் இருந்த தங்க நகைகளை வலுக்கட்டாயமாக பறித்த குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபர், புதன்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பெண்ணை விடுதிக்கு அழைத்துச் சென்று இருவரும் ஒன்றாக இருக்கும் பொழுது அந்தப் பெண்ணுடன் குறித்த இளைஞர் நிர்வாணமாகப் படம் பிடித்துள்ளார். அதனையடுத்து அந்த நிர்வாணப் புகைப்படங்களை பெண்ணின் கணவரிடம் காட்டுவதாகக் கூறி மிரட்டி அவரிடம் இருந்த 17 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகளை வலுக்கட்டாயமாகப் பெற்றுள்ளார் என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

நீர்கொழும்பைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

## கல்வி சேவையாளர்கள் கௌரவிப்பு

வி.ரி. சகாதேவராஜா

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையில் சேவையாற்றி கல்விப்பணியில் தடம் பதித்து ஓய்வுபெற்ற ஐந்து கல்வி சேவையாளர்கள் புதன்கிழமை (19) கௌரவிக்கப்பட்டனர்.

சம்மாந்துறை வலயத்தில் நீண்ட காலம் பணியாற்றி ஓய்வு பெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்ஏ. சபூர்த்தம்பி, ஆசிரிய ஆலோசகர்களான திருமதி தேவமலர் ராஜேஸ்வரன், கே ரெத்தினஸ்வரன், அல்ஹாஜ் மௌலவி எம் .ஐ .ஹஜ்ஜி முஹம்மத், கே .எம். சவூதூன் நஜ்ஜாஸ் ஆகிய ஐவரும் பொன்னாடை போர்த்தி வாழ்த்து மடல் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## வான் விபத்து : 5 பேர் காயம்

எம் எஸ் எம் நூர்தீன்

மட்டக்களப்பு காத்தான்குடியிலிருந்து, கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கி சென்ற வான் மின்னேரியாவில் வைத்து தனியார் பஸ் வண்டியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

புதன்கிழமை (19) இடம்பெற்ற இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



## வல்லையில் புற்றரைக்கு விசமிகளால் தீ வைப்பு



எஸ். தில்லைநாதன்

யாழ்ப்பாணம் வல்லை வெளியில் காய்ந்த புற்றரையை விசமிகள் சிலர் தீ மூட்டி எரித்துள்ளனர். இதனால், அந்தப் பகுதியே புகைமூட்டமாக மாறியதுடன், அவ்வழியாக பயணித்தவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

வடமராட்சி - வல்லை இராணுவ முகாமுக்கு முன்பாக இருந்த புற்றரையே இவ்வாறு எரியூட்டப்பட்டது.

இந்தப் புற்றரை நிலம் இலங்கையின் அரிய உயிரினமான கௌதாரி மற்றும் பறவை இனங்களின் புகலிடமாகக் காணப்படுகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.


### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.


**கம்பனியின் பழைய பெயர்:**
சுவிஸ் சிங்கப்பூர் சிலோன் (பீவீ) எல்டீடி

**கம்பனியின் புதிய பெயர்:** ஆதித்ய பிர்லா குளோபல் டிரேடிங் (லங்கா) (பீவீ) எல்டீடி

**பதிவு அலுவலக முகவரி:**
இல. 241ஏ, அம்பத்தளே வீதி, முல்லேரியா வடக்கு, முல்லேரியா, கொழும்பு.

**கம்பனியின் இலக்கம்:** பீவீ 00246743
**மாற்றம் நிகழ்ந்த திகதி:** 06.07.2023

**டைரக்டர்**
**க்ரஸ்டன் கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிவிடி) எல்டீடி**
**கம்பனியின் செயலாளர்கள்**







# அரசியல் கைதிகள் விடுதலையும் பொதுமன்னிப்பும்

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான வலியுறுத்தல்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. ஒருபுறம் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றாலும், தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி, போராட்டங்களும் பேரணிகளும் இடம்பெறாமல் இல்லை.

இந்நிலையில்தான், ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் மேலுமிரு தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆயுள் தண்டனை பெற்று, 15 வருடங்களுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டிருந்த மிருசுவிலைச் சேர்ந்த சண்முகரட்ணம் சண்முகராஜன் (16 வருடம்) மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்த செல்லையா நவரட்ணம் (14 வருடம்) ஆகியோரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இந்த பொதுமன்னிப்பை வரவேற்கவேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால், சிறையில் வாடுகின்ற, படைத்தரப்பைச் சேர்ந்தவர்களுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படவேண்டும் என்று கடந்தகாலங்களில் தென்னிலங்கையில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. பயங்கரவாதிகளை விடுவித்தால், நாட்டை மீட்டெடுத்த வீரர்களையும் விடுதலை செய்யவேண்டும் என்றே வலியுறுத்தின.

ஆனால், எவ்விதமான விசாரணைகளும் இன்றி, தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் சிலர், சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர். அவ்வாறானவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் முக்கால்வாசிக்கு மேல் சிறையிலேயே கழித்துவிட்டனர். எனினும், பாலியல் துஷ்பிரயோகம், கொலை, கொள்ளை, மனித படுகொலைகள், உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றமிழைக்கப்பட்ட படையினரே சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர்.

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு பல சந்தர்ப்பங்களில் தவறுதலாக பயன்படுத்தி உள்ளமையே உண்மையாகும். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு உயர்நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டமையால், பொதுமன்னிப்பு இரத்துச் செய்யப்பட்டு உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் அவர், மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார்.

இதேவேளை, ரோயல் பார்க் கொலைவழக்கின் குற்றவாளிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு, நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எனினும், நீண்டகாலமாக கொடுக்கப்பட்ட அழுத்தங்களின் காரணமாக, தமிழ் அரசியல் கைதிகள் இருவர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி இந்தியாவுக்கு விஜயம் செய்திருக்கும் நிலையில், தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பில் இந்திய தரப்பினரால் ஏதாவது கேள்விகள் கேட்கப்படுமாயின், அண்மையில் பொதுமன்னிப்பு அளிக்கப்பட்டு, விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் இருவரையும் இலங்கை தரப்பினர் உதாரணமாக காட்டிவிடுவர்.

நீதிமன்றங்களால், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ், புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட பலரும் மீண்டும், மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கசப்பான சம்பவங்கள் கடந்தகாலங்களில் இடம்பெற்றன. எனினும், வாழ்வில் முக்கால்வாசிக்கு மேல் சிறையில் இருந்து விடுதலையானவர்கள், மிகுதிகாலத்தை தங்களுடைய குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ்ந்து கழிப்பதையே விரும்புவர் என்பதை நினைவில் கொள்க. ஆகையால், விசாரணை எனும் பெயரில் மீண்டும் தொந்தரவு செய்யாதீர்கள்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

மனிதர்களின் தேவைகள் நிறுத்தப்படுவதில்லை. எவ்வளவு பெரும் செல்வம், கல்வி, புகழ் என்பன சேர்ந்தாலும் எந்த ஒரு மனிதனும் முழுமையாகத் திருப்திப்பட மாட்டான். எங்கோ ஒரு குறையைச் சொல்லிவிடுகின்றார்கள்.

நாடுகளின் அரசுகள் கூட, ஆசை மிகுதியால் பக்கத்து நாடுகளுக்குள் நுழைந்து, அட்டகாசம் செய்து அந்த நாட்டைக் கைப்பற்றிவிடுவதுண்டு.

எளியவர்களை உதைப்பது, காலம் முழுக்க நடந்துகொண்டிருக்கின்றது. அரசியலில் இன்று நடப்பது என்ன? வலிமையற்ற அரசாங்கத்தை வைத்திருக்கும் அரசுகள், சிறுபான்மை மக்களுடன் அடிக்கடி மோதுகின்றன.

அவர்களை அடக்கி வைத்திருப்பதில் புலன்களைச் செலுத்தினால், மிஞ்சுவது மேலதிக ஆசைகளும் ஆணவமும் தான். உலக சரித்திரங்களை அறிந்தவர்கள் கூட, தங்களுக்கு அரசபதவி வந்தால், எவரை மதிக்கின்றார்?

ஓரிரு நல்லவர்கள் மாத்திரம், பதவியில் நீதியுடன் கருமமாற்றுகின்றார்கள். பிறரை வருத்தி, அவர்களின் முயற்சியால் வரும் முன்னேற்றம் ஈடேற்றம் தராது.

மாந்தர்கள், ஒருவரை நம்பி ஒருவர் இருக்க வேண்டும். அறத்தை அறியாதவர்கள், வெறுக்கும் காரியங்களைச் செய்வார்கள். அநேகர் அனுபவங்களை மறந்து போகின்றார்கள். இதனாலேதான் துன்பங்கள் வருகின்றன.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### குடிநீரின்றி இறக்கும் கால்நடைகள்

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள குதிரைகள் மற்றும் கால்நடைகளுக்கான குடிநீர் இல்லாத நிலை காணப்படுவதாகவும் இதனால் நீண்ட தூரம் குடிநீருக்காக அலைந்து இறக்கின்ற நிலமை காணப்படுவதாகவும் பிரதேச பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது பிரதேசத்தில் உள்ள கேணிகள் நீண்ட காலம் தூர்வாரப் படாமலும் துப்பரவு செய்யப்படாமலும் கானப்படுவதுடன் கேணிகளில் தற்போது இருக்கின்ற நீரன் உப்புச்செறிவு அதிக அளவில் காணப்படுவதனால் அவற்றை அருந்தும் மிருகங்கள் உயிரிழந்து வருவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குதிரைகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்குரிய சகல வசதிகள் இருந்தும் அவை இதுவரை செய்யப்படவில்லை என்றும் பிரதேச அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.

குறிப்பாக இந்த விடயம் உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட்டு எதிர்வரும் நாட்களில் கேணிகள் ஊடாக கால்நடைகள் மற்றும் குதிரைகளுக்கான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுந்தீவு பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

யது பாஸ்கரன்



கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 10:

# 1915: சிங்கள பேரினவாத நலன்களுக்குப் பலியான தேசம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1915 கலவரமானது சிங்கள பௌத்த பேரினவாதம் எவ்வாறு தன்னைத் தகவமைத்து வலுப்படுத்தியது என்பதைக் காட்டி நிற்கும் முக்கியமான தொடக்கப்புள்ளியாகும். இலங்கையில் சிறுபான்மையினரின் எதிர்காலம் குறித்த முக்கியமான கேள்விகளை இந்தக் கலவரம் எழுப்பியது. அதேவேளை இனத்துவத்தை விட ஆதிக்கத்தில் இருந்தோரின் வர்க்க நலன்களே முன்னிலையில் இருந்தன என்பதை இந்நிகழ்வை ஒட்டிய அரசியல் தலைவர்களின் நடத்தை காட்டி நின்றது.

இக்கலவரத்திற்கு முன்பே முஸ்லீம்களை ஆத்திரமூட்டும் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளில் சிங்கள பௌத்தர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளனர். முஸ்லீம்களின் பள்ளிவாசல்களுக்கு முன்னால் பெருத்த சத்தத்துடன் பெரகர போகும் நடவடிக்கைகளில் பௌத்தர்கள் 1860களில் இருந்தே ஈடுபட்டு வந்தனர். 1880களில் கண்டியில் இவ்வகையான செயற்பாடுகள் அதிகரித்த நிலையில் அவை சிறுசிறு பதட்டங்களுக்கு வழிவகுத்தாலும் அவை மோதலாக மாறவில்லை. 1902 இல் காலியில் இதே போன்ற ஒரு பெரகர ஊர்வலம் பௌத்த முஸ்லீம் சமூகங்களுக்கு இடையே நெருக்கடியைத் தோற்றுவித்தது. 1907ம் ஆண்டு எசல பெரகர கம்பொல பள்ளிவாசல் வழியாகப் போகும்போது மோதல் ஏற்பட்டு 6 பேர் காயமடைந்தனர். இவ்வாறு மெதுமெதுவாக புகையத் தொடங்கிய பிரச்சனையே 1915இல் கொழுந்துவிட்டெரிந்தது.

1915ம் ஆண்டுக் கலவரம் மிகுந்த திட்டமிடலுடன் நடத்தப்பட்டது. நாடெங்கும் 116 இடங்களில் கலவரங்கள் நடந்தன. 25 முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர், 186 பேர் காயமடைந்தனர், குறைந்தது நான்கு பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். 4075 கடைகள் சூறையாடப்பட்டன. 350 வீடுகளும் 17 பள்ளிவாசல்களும் முழுமையாகத் தீக்கிரையாகின. அக்காலப் பெறுமதியில் இந்தக் கலவரத்தில் ஏற்பட்ட சேதம் கிட்டத்தட்ட 7 மில்லியன் இலங்கை ரூபாய்கள் என்று கணக்கிடப்பட்டது.

இந்த வன்முறையின் தன்மை இலங்கையின் வன்முறை வரலாற்றின் முக்கியமான தொடக்கப்புள்ளி எனக் கொள்ளல் பொருத்தம். கொலனிய நிர்வாகத்தின் கீழேயே இவ்வாறான ஒரு வன்முறையைக் கட்டவிழ்க்க முடியுமெயின் சுதந்திர இலங்கையில் எவையெல்லாம் சாத்தியமாகும் என்பதை நிச்சயமாக எதிர்பார்த்திருக்க வியலும். ஆனால் சிறுபான்மையினத் தலைவர்களின் கவனம் அவர்களது வர்க்க நலன்களிலேயே இருந்தது. இந்நிகழ்வு நடக்கும் போது இலங்கையின் சனத்தொகையில் 66% மானவர்கள் சிங்களவர்கள், 24% தமிழர்கள், 6.5% மானவர்கள் முஸ்லீம்கள்.

இந்தக் கலவரத்தை கொலனிய ஆட்சிக்கு எதிரானதாக பிரித்தானிய நிர்வாகம் கருதியது. கடுமையாக நடவடிக்கை எடுக்க முடிவு செய்தது. வன்முறையில் ஈடுபட்ட சிங்களவர்கள் மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு 412 பேர் தண்டிக்கப்பட்டனர். 34 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். அவர்களைக் காப்பாற்ற களத்தில் இறங்கியோரில் முக்கியமானவர் பொன்னம்பலம் இராமநாதன். அவர் முஸ்லீம்களுக்கு எதிராகப் பேசினார். வன்முறைகளுக்குக் காரணமான சிங்களத் தலைவர்கள் குற்றமற்றவர்கள் என்று வாதிட்டார்.

இராமநாதனின் முஸ்லீம் விரோத நிலைப்பாட்டுக்கு ஒரு வரலாறு உண்டு. அவர்களை ஒரு தனித்த இனமாக அடையாளங்காண மறுத்தவர் இராமநாதன். முஸ்லீம் திருமணச் சட்டம் தொடர்பான விவாதம் 1885இல் இலங்கைச் சட்டசபையில் நிகழ்ந்த போது முஸ்லீம்கள் தமிழர்களே என்றும் அவர்களுக்குத் தனியான அடையாளம் இல்லை என்று வாதிட்டவர். இது குறித்த எதிர்வினைகளுக்குப் பதிலாக அவர் எழுதிய நீண்ட ஆய்வுக் கட்டுரை 1888 ஏக இல் *The Ethnology of the 'Moors' of Ceylon* என்ற யை எழுதினார். அதில் முஸ்லீம்கள் இனத்தால் தமிழர்கள் என்றும் இஸ்லாமிய மதத்தைப் பிற்பற்றுவதால் முஸ்லீம்கள் என்றும் வாதிட்டார். அவர் முஸ்லீம்கள் தனித்துவமானவர்களாக ஏற்க மறுத்தார். இக்கட்டுரை இலங்கையில் வாழும் முஸ்லீம்களில் பெரும்பான்மையானோர் தமிழர்களாக இருந்து இஸ்லாமிய மதத்தைத் தழுவியவர்கள் என்ற அடிப்படையை முன்வைக்கிறது.

இந்தப் பின்புலத்திலேயே பொன்னம்பலம் இராமநாதன் சிங்களத் தலைவர்களுக்காக வாதிட்ட நிகழ்வை நோக்க வேண்டியுள்ளது. குறிப்பாக கலவரம் குறித்து அவரால் எழுதப்பட்டு பிரித்தானியாவில் 1916ம் ஆண்டு வெளியிடப்பட்ட *Riots and Martial Law in Ceylon, 1915* புத்தகமானது வன்முறையின் தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதோடு இக்கலவரம் ஏற்படுவதற்கு முஸ்லீம்களும் காரணம் என்ற வகையில் தனது வாதங்களை முன்வைக்கிறது.

இதில் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில், 1915ம் ஆண்டு முஸ்லீம்கட்கு எதிரான கலவரத்தைத் தூண்டி விட்டவர்கள் பிற்காலத்தில் சிங்களப் பேரினவாத அரசியலில் முக்கிய பங்கு வகித்தனர். 1915 இல் வணிகத் துறையில் ஆதிக்கத்தை இலக்காக வைத்து முஸ்லிம்கள் எதிரிகளாக்கப் பட்டனர். 1914ம் ஆண்டு தொடங்கிய முதலாம் உலகப் போரும் அதைத் தொடர்ந்த பொருளாதார நெருக்கடியும் இதற்கு நல்லதொரு சாட்டாக அமைந்தது. யாரைக் கனவான்கள் என்றும் நல்லவர்கள் என்றும் இன நல்லிணக்கத்தின் ஆணிவேர்கள் என்றும் பொன்னம்பலம் இராமாநாதன் விழித்தாரோ அவர்கள் பின்னர் அரசியலில் சட்ட நிறைவேற்று சபையில் ஆசனங்களைத் தமதாக்குகிற தேவை வந்த போது தமிழ்த் தலைவர்களுடன் முரண்படச் சிங்களக் கனவான்கள் எனப் பட்டோர் தயங்கவில்லை.

இன்னறளவும் தமிழ்த்தேசிய சிந்தனைப் பரப்பில் சிங்களத் தலைவர்கள் வஞ்சகர் என்றும் தமிழ்த் தலைவர்களைச் சான்றோர் என்றும் விளக்கும் போக்கு உள்ளது. இங்கு நாம் நினைவில் வைக்க வேண்டியது யாதெனில் 1915ல் முஸ்லீம்களுக்கு எதிராகப் பேசிய பொன்னம்பலம் இராமநாதனின் வஞ்சகம் போன்றதே சிங்களத் தேசியவாதத் தலைவர்களது வஞ்சகமும்.

1915 வரை சிங்களத் தேசிய வாதத்துடன் முரண்பாடின்றி முஸ்லீம்கட்கு எதிராகக் கலகஞ் செய்த சிங்கள இனவாதிகளை விடுதலை செய்யுமாறு கொலனிய ஆட்சியாளர்களின் மனதை மாற்றிய இராமநாதன், 1915க்குப் பிறகு வலுப்பெற்று வந்த சிங்களப் பேரினவாதத் தலைமை தன்னையும் ஓரங் கட்டுகிற நிலைமையை 1921ல் தெளிவாக உணர்ந்த பின்பு, தமிழ் இன அடிப்படையில் தனது அரசியற் கருத்துக்களை வெளிப்படையாகவே முன்வைத்தார். அவர் கண்ட சிங்கள-தமிழ் முரண்பாடு இரு சமூகங்களது மேட்டுக் குடிகள் இடையிலான முரண்பாடகவே இருந்தது என்பதையும் நினைவில் கொள்ளவது அவசியம்.

போன்னம்பலம் இராமநாதனின் நடந்தை தமிழ் முஸ்லீம் உறவில் நெருக்கடியை உருவாக்கியது. குறிப்பாக 1915 கலவரத்தின் பின்னரான அவரின் நடத்தை தமிழ் மக்கள் மீதான பொதுவான கவலையாக, சங்கடமாக உருவெடுத்தது. இலங்கை, இந்திய முஸ்லிம்கள் பிரதேச வேறுபாடின்றித் தழிழையே வீட்டு மொழியாகக் கொண்டிருந்தனர். அவர்களிற் கணிசமானவர்களது முன்னோர் தென்னிந்தியாவில் இருந்து வந்தவர்கள். இவ பயன் படுத்திப், பொன்னம்பலம் இராமநாதன், அவர்கள் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றும் தமிழர்கள் என்று கொச்சைப் படுத்தி அவர்களது தனித்துவத்தை மறுத்தார். இதன் மூலம் அவர்கள் முஸ்லிம்களுக்கான தனியான பிரதிநிதித்துவத்தை மறுத்த நோக்கம் முக்கியமாக அவரது சுயநலமென்றே கூற வேண்டும். தமிழ்ப் பேசுகிற அத்தனை பேரையும் தமிழர் எனக் கூறி அந்த எண்ணிக்கை வலிமையைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திய இராமநாதன் தமிழ் மக்களில் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த வசதி படைத்த உயர் சாதியினரது நலன்களை வலியுறுத்திய ஒரு அரசியல்வாதி என்பதை நாம் மறந்துவிடலாகாது.

பௌத்தர்களது மத உரிமைகள் தொடர்பாக அவர் குரல் கொடுத்துள்ளார். அது மெச்சத் தக்கது. ஆனாலும் அதற்கும் மேலாகச் சிங்களப் பேரினவாதிகளுக்குச் சாதகமாக முஸ்லிம்கட்கு எதிராகக் கொலனிய எசமானர்களிடம் மன்றாடி இருக்கிறார் என்பது அவரது நோக்கங்கள் பற்றிய பல ஐயங்களை எழுப்புகின்றன. இந்த ஐயங்கள் தமிழ் முஸ்லீம் சமூகங்களுக்கிடையான நீண்ட கசப்புணர்வுகளாக மாறின என்பதுதான் வருந்தத்தக்க உண்மை.

முஸ்லிம் அரசியல் அடையாளத்தின் தோற்றத்திற்கு அவர்கட்கு எதிரான சிங்களப் பேரினவாதப் பகைமை ஒரு முக்கியமான பங்களித்தது. முஸ்லிம்கட்கும் தமிழருக்குமிடையே இருந்த அடையாள வேறுபாட்டின் முக்கியத்துவத்தைக் குறைவாக மதிப்பிட்டதும் போதாமல், அதை முற்றாகவே மறுத்ததன் மூலம், பொன்னம்பலம் இராமநாதன் அந்த வேறுபாட்டை மேலும் வலுப் படுத்தினார். போததற்குப் பிற்படுத்தப்பட்ட தமிழ்ச் சமூகப் பிரிவினரைப் பற்றித் தாழ்வாகப் பேசி வந்த அதே தோரணையில் முஸ்லிம்கள் பற்றி அவர் கூறிய சொற்களும் முஸ்லிம்-தமிழ்ப் பகைமையை வளர்ப்பதற்கு இன்று வரை பயன்பட்டு வந்துள்ளன. இது குறித்து அடுத்து நோக்கலாம்.

# பூகோளமயமாக்கலும் கலாசாரமும்



சயனிகா ஸ்ரீகாந்த்
ஊடக கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைகழகம்.

1981 ஆம் ஆண்டளவில் பூகோளமயமாதல் என்ற எண்ணக் கரு பொருளாதார துறையில் பயன்படுத்தபட தொடங்கியது. தியோடோர் டேவிட் ( Theodore Devitt) என்பவர் எழுதிய "சந்தைகளில் பூகோளமயமாதல்" (Globalization Of Markets) எனும் நூலில் பூகோளமயமாதல் என்பது பொருளதாரம் தொடர்பில் பயன்படுத்தப்பட்டது. பூகோளமயமாதல் என்பது பல்வேறு நோக்கங்களில் பார்வையிடப்படுகிறது.

இந்த சொற்பதம் தற்காலத்தில் அதிகமாக பேசப்பட்டு வரும் எண்ணக்கருவாக காணப்படுகிறது. இவ்வுலகில் சகல விடயங்களிலும் பூகோளமயமாதல் என்ற சொல் வியாபித்துள்ளது. பூகோளமயமாதல் என்பது அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, தொடர்பாடல் ஆகிய துறைகளில் பெரிதளவில் செல்வாக்கு செலுத்துகின்றன. உலகை ஒரு இடமாக அல்லது சூழல் தொகுதியாக கொண்டு சகல செயல்பாடுகளையும் ஒருமித்த ஒரு அழகில் நகர்த்திச் செல்லக்கூடிய செயற்பாட்டின் ஒருங்கிணைப்பாக பூகோளமயமாதல் என்பதை பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் வரைவிலக்கினப்படுத்துகிறார்கள்.

பூகோளமயமாதல் என்பது "Globalization" என்று ஆங்கில பதத்தில் கருத்துருவாக்கம் ஆகும். தமிழில் "உலகமயமாக்கம்" என்ற சொல்லும் சில தருணங்களில் Globalization என்று ஆங்கில பதத்தின் ஊடாக பயன்படுத்துவதுண்டு. இவ் சொற்பதங்கள் இரண்டிலும் பொருள் வேறுபாட்டை கவனிக்க முடியும். பூகோளமயமாதல் என்பது தானாக விரியும் ஒரு செயற்பாடு. பூகோளமயமாக்கம் என்பது யாரோ அதன் பின் இருந்து ஆக்குவதாக பொருள் கொள்ளப்படும்.

பூகோளமயமாதல் என்பது,

- வளர்ந்து வரும் நாடுகளுக்கு அதிகரித்த வாழ்க்கை தரத்தையும் வளத்தையும் கொண்டு வருகிறது. முதலாம் மூன்றாம் நாடுகளினதும் நிதி பலத்தை பெருக்க உதவுகிறது.
- பொருளியல்,சமூக மற்றும் சூழலியல் அடிப்படையில் பூகோளகமயமாதலை எதிர்மறையான விரும்பத்தகாத ஒரு விடயமாக கருதுகிறது. இதன் அடிப்படையில் பூகோளமயமாதல் வளர்ந்து வருகின்ற சமுதாயங்களின் மனித உரிமைகளை நகர்த்துகிறது.
- இத்தகைய "பூகோளமயமாதல்" என்ற எண்ணக்கரு இவ்வுலகில் மற்றும் மனித வாழ்வியலில் பல மாற்றங்கள் மற்றும் பண்புகளில் சிதைவுகளை ஏற்படுத்தி வருகிறது. இன்றைய நவீன உலகின் முக்கிய சவால்களை பூகோளமயமாதல் மனிதன் முன்னிலையில் நிறுத்தி சென்றுள்ளது.
- இவ்வுலகமயமாதல் இன்றைய கலாசாரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. ஒவ்வொரு நாட்டினதும் அபிவிருத்திக்கு அடிகோலிட்டு பூகோளமயமாதல் பல்வேறு வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்தியுள்ளது.

பூகோளமயமாதலால் கலாசார ரீதியான மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பூகோளமயமாதலின் தாக்கம் உணவு, உடை, அழகு சாதன பொருட்கள், தொலைத்தொடர்பு சேவை, தொலைத்தொடர்பு சாதனங்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக வலைத்தளங்கள் போன்றன நவீனமயமாக்கலுக்குட்பட்டு மாற்றமடைந்து வருகிறது.

ஒரு நாட்டில் அல்லது உலகின் எந்தவொரு பாகத்திலும் மரபுசார் அரசுக்கு அப்பால் இயங்கக்கூடிய சமூக பொருண்மியக் கட்டமைப்பாக நவகாலனித்துவம் அமையும். உலகில் விரவிக் காணப்படும் ஓர் இனக்குழுமம் அதன் அடையாளங்களைத் தக்கவைத்து முன்னேறும்போது, பூகோளமய-மாக்கலுடன் இயைந்த நவகாலனித்துவத்தை உருவாக்க முடியும்.

மரபுசார் அரசுகளுக்கு அப்பால் தமிழர்கள் நவகாலனித்துவத்தினை ஏற்படுத்தும் சூழல் ஈழத்தமிழரின் புலம்பெயர்வு வாழ்வு ஏற்படுத்தி உள்ளது. அவ்வகையில் தமிழர் நலன்சார் சர்வதேசக் கட்டமைப்புக்குள் உருவாக்கப்பட வேண்டிய முக்கிய துறைகளாவன :

1. பொருண்மிய மேம்பாடு, அதாவது பொருளாதார முதலீடு சர்வதேச மட்டத்தில் அமைக்கப்படல் வேண்டும். குறிப்பாகக் கனடாவிலும், அவுஸ்ரலியாவிலும் தமிழரின் காத்திரமான பொருளாதார முதலீடு, தமிழரின் நவகாலனித்துவத்திற்கு மிகவும் இன்றியமையாததாகும்.

2. புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு நாடுகளில் அந்நாடுகளின் சட்டங்களினால் பாதிக்கப்படுகின்றனர். எனவே தமிழரின் நவகாலனித்துவ ஆதிக்கத்திற்கு சர்வதேச சட்ட ஆலோசனை அமையம் அமைதல் நன்று.

3. தமிழரின் கலாசார மேம்பாடு நவகாலனித்துவ ஆதிக்கத்திற்கு மிகவும் இன்றியமையாதது. இவற்றில் முக்கியமானது தமிழர்களால் அமைக்கப்படும் இந்து ஆலயங்களும், கலாசார நிகழ்வுகளும் ஆகும். இது தமிழர்களின் கலாசாரம் காலமாற்றத்துடனும் முன்னேற வழிவகுக்கும்.

4. சர்வதேச ரீதியில் தமிழர்கள் கல்வியில் முன்னேறல் நவகாலனித்து-வத்திற்கு மிகவும் இன்றியமையாதது ஆகும். ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள கல்விக் கட்டமைப்பிலும் தமிழ் மாணவர்கள் உணர்வுக்கூர்மை உடையவர்களாகவும் (emotional intelligence) மீத்திறமை உடையவர்களாக மாறல் வேண்டும்.

5. சர்வதேச தமிழ் தொழில்நுட்ப மேலாண்மை வாரியம் அமைக்கப்படல் வேண்டும். இதில் தகவல் தொழில்நுட்பம், நனோ தொழில்நுட்பம், உயிர்மூலக்கூற்றுத் தொழில்நுட்பம் மிகவும் இன்றியமையாதவை ஆகின்றன.

6. சர்வதேசரீதியில் தமிழர்கள் வர்த்தக மேம்பாடு அடைதல் வேண்டும். விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து என்பனவற்றில் முதலீடுகள் செய்யப்படல் வேண்டும்.

7. சர்வதேசரீதியில் இராஜதந்திர அந்தஸ்து உள்ள தமிழர் அமைப்பு உருவாக்கப்படல் வேண்டும். இதனை இஸ்ரேல், ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளின் பல்கலைக்கழகங்களின் சர்வதேச இராஜதந்திரக் கற்கைகள்மூலம் உருவாக்கலாம்.

தமிழர்களின் நவகாலனித்துவத்திற்கான நியாயத்துவங்களாக அமைபவை :

1. தமிழரின் தொன்மையான வரலாற்று இருப்பு.
2. இந்திய மேலாதிக்கமும், சிங்கள மேலாதிக்கமும் தமிழரின் இருப்பை இல்லாது செய்து விடலாம்.
3. நாகரீக மேம்பாட்டிலும், தொழில்நுட்ப மேம்பாட்டிலும், புலம்பெயர் வாழ்விலும் தமிழரின் இருப்பைத் தக்கவைக்க நவகாலனித்துவவாத நியாயாதிக்கம் இன்றியமையாதது.
4. ஆங்கிலேயரின் காலனித்துவத்தில் தமிழர்கள் அடிமைகளாகக் கப்பல்களில் ஏற்றப்பட்டனர். அண்மைய சிங்கள மேலாண்மையில் தமிழர்கள் படகுகளில் அகதிகளாக ஏற்றப்பட்டனர். எனவே தமிழர்கள் உலகில் தமிழ்மொழி ஒலிக்க, ஒளிர நவகாலனித்துவத்தினை ஏற்படுத்த வேண்டும்.


மனித உரிமைகள் கலாசார தாக்கம் மனித உரிமைகளைப் பொறுத்துக்கொண்ட கலாசார தாக்கத்தின் பெயர். இது மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் வாழ்க்கையைப் பாதுகாக்கும் அரசியல் முறைகளைப் போற்றுகின்றது. தமிழ் கலை மற்றும் மரபுத்தன்மை கலாசார தாக்கம் தமிழ் மொழியின் மூலம் அதன் சர்வதேச மரபுத்தன்மை மற்றும் கலையின் முன்னேற்றத்தைத் தெரிவிக்கும்.முக்கியமானது, கலாசார தாக்கம் உலகமயமாக மூன்று முக்கியமான பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது: அரசியல் கலாசார தாக்கம், ஆர்வம் கலாசார தாக்கம், மனித உரிமைகள் கலாசார தாக்கம். இவை அக்கலைகளுக்கு அடிப்படையானவைகளாகும்.

உலக மயமாதலில் கலாசாரத்தில் பங்கேற்பவர்கள் கலையின் மூலதனத்தை ஆராய்ந்து கொண்டு அதை விருதுபடுத்தி வளர்க்கின்றனர். இது மனிதர்கள் பண்புகளையும் உரிமைகளையும் மீட்டமைக்கும் வழிமுறையாகும். கலாசாரம் அதன் உலகத்தில் அனைத்து வகைகளும் உண்டுபவைகளையும் பொதுமக்களுக்கு அனுபவிப்பதன் மூலம் வளர்கின்றது.

உலக மயமாதலில் கலாசாரத்தின் பல வகைகள் உள்ளன, அவை:

- கலை மற்றும் கலைத்தொகை கலாசாரம்: கலையால் அல்லது அதன் தொகையால் சில நாடுகள் திருவிழாவையும் பொறியாளர்களையும் அணுகுவதன் மூலம் கலைத் தலைவர்கள் மற்றும் கலைஞர்கள் வெளியேற்றுவதற்கும், கலையை அணுக மற்றும் கலைஞர்கள் பொருந்துவதற்கும் பயன்படுகின்றனர்.
- பணம் மற்றும் வர்த்தக கலாசாரம்: பொதுவான மொழி, பங்குகள் மற்றும் நாடுகளுக்குள் உள்ள நடப்புகளை பொதுமக்கள் அணுகுவதன் மூலம் மக்களின் வர்த்தக மற்றும் பணத்தை வளர்க்கின்றனர்.
- ஆன்மீக கலாசாரம்: மத மற்றும் மீண்டும் பயன்படுத்தப்படும் பொதுவான மனித பாதைகளை வளர்க்கின்றனர்.
- அறிவியல் மற்றும் தொழில் கலாசாரம்: அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆராய்ந்து மேம்படுத்தல் மற்றும் வளர்ச்சியை அதிகரிக்கும் முறைகளை அறியலாம்.

பூகோளமயமாதலால் இன்று பண்பாடு மற்றும் தனித்துவம் என்பன மாற்றம் அடைந்து வருவதை காணக்கூடியதாய் உள்ளது. என்னதான் மாற்றங்கள் எதிர் வந்த போதிலும் நமது மக்கள் நமது பண்பாட்டை இழத்தல் ஆகாது. குறிப்பாக மேலை நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும்; நம்மவர்கள் நமது பண்பாட்டை பேணிக்காப்பவர்களாக விளங்க வேண்டும். ஆகவே எங்கும் எதிலும் நன்மை தீமை இரண்டும் கலந்தே இருக்கும் என்பதை உணர்ந்து உலகத்தோடு ஒத்து வாழ்வோம் நமது தனித்துவத்தை பேணி காப்போம்.



சூழல் வாரத்தை முன்னிட்டு

# "Earth Is Calling, Are You Listening?" திட்டம் முன்னெடுப்பு

சூழல் வாரத்தை முன்னிட்டு, SLT-MOBITEL, லங்கா நேச்சர் கென்சர்வேஷனிஸ்ட்ஸ் (LNC) உடன் கைகோர்த்து சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமொன்றை அண்மையில் முன்னெடுத்திருந்தது. "தென்கொழும்பு கரையோரப் பகுதிகளில் எஞ்சியிருக்கும் கடல் ஆமை இனப்பெருக்க சஞ்சாரிப்பு பகுதிகளை பாதுகாத்து மற்றும் மெருகேற்றல்" மற்றும் "கொழும்பில் காணப்படும் பிளாஸ்ரிக் கழிவுகளுக்கான தீர்வுகள்" எனும் தலைப்பில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.



கடந்த இரண்டு ஆண்டுகளில் ஒன்லைன் நிகழ்ச்சித் திட்டமாக இது போன்ற நிகழ்வுகளை SLT-MOBITEL முன்னெடுத்து, நெருக்கடியான சூழல்சார் பிரச்சனைகள் தொடர்பில் விழிப்புணர்வை கட்டியெழுப்பியிருந்தது. கொழும்பிலுள்ள கடற்படை தலைமையகத்தின் கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கரையோரப் பாதுகாப்பு மற்றும் சூழல் பிரச்சனைகள் தொடர்பான பல்வேறு தலைப்புகள் பற்றி இந்த நிகழ்ச்சித் திட்டம் ஆராயப்பட்டிருந்தது. SLT இன் சந்தைப்படுத்தல் சேவைகள் பொது முகாமையாளர் அனுருத்த சூரியாரச்சி மற்றும் LNC இன் தலைவர் சமந்த குணசேகர ஆகியோர் சூழல்சார் பாதுகாப்புசார் செயற்பாடுகளை மேற்கொள்வதன் முக்கியத்துவம் பற்றி உரையாடியிருந்தனர்.

நிலைபேறான செயற்பாடுகளை ஊக்குவித்தல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பிலும் இந்த செயற்குழுவினர் உரையாடியிருந்தனர். இந்த பேச்சாளர்களில் கரையோர பாதுகாப்புத் திணைக்களத்தின், கரையோர வளங்கள் நிர்வாக பணிப்பாளர், டபிள்யு.ஏ.என்.எஸ். ராஜரட்ன அடங்கியிருந்ததுடன், கரையோரப் பாதுகாப்பு மற்றும் சூழல் பிரச்சனைகள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர்.

வயம்ப பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியரும், கண்டல் தாவர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான பாவனை தொடர்பான தேசிய நிபுணர் குழுவின் தலைமை அதிகாரியுமான பேராசிரியர். செவ்வந்தி ஜயகொடி, கரையோர பகுதிகளை அர்த்தமுள்ள வகையில் இனங்காணல் மற்றும் இயற்கை தாவரங்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்ந்திருந்தார். ருஹுணு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர். டேர்னி பிரதீப் குமார கருத்துத் தெரிவிக்கையில், கரையோரப் பகுதிகளில் பிளாஸ்ரிக் கழிவுகளால் ஏற்படும் பிரச்சனைகள் மற்றும் பொது மக்களின் பொறுப்புணர்வு தொடர்பில் உரையாற்றியிருந்தார். வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் சிரேஷ்ட கால்நடை வைத்தியர். சுஹத ஜயவர்தன குறிப்பிடுகையில், கடல் ஆமைகள் எதிர்கொள்ளும் பொதுவான காயங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட இடையீடுகள் பற்றி உரையாடியிருந்தார். குழுநிலை கலந்துரையாடல் மற்றும் கருத்துப் பெறும் செயற்பாடுகளுடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தியடைந்திருந்ததுடன், புதிய சிந்தனைகளை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருந்தது.

இலங்கை கடற்படை கட்டளைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, இலங்கை கடற்படை பிரதி பிரதம அதிகாரி ரியர் அட்மிரல் பிரதீப் ரத்நாயக்க, SLT-MOBITEL, LNC, இலங்கை கடற்படை, பொலிஸ் திணைக்களம் மற்றும் இதர திணைக்களங்கள், ஹோட்டல் துறை சேர்ந்த பங்குபற்றுனர்கள் ஆகியோரும் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

"Earth Is Calling, Are You Listening?" திட்டம் SLT-MOBITEL இன் ESG முயற்சிகளுடன் பொருந்துவதாக அமைந்திருப்பதுடன், சூழலைப் பாதுகாப்பது மற்றும் சமூகத்தின் நலனை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் அமைந்துள்ளது. புவியை பாதுகாப்பது தொடர்பான ஆழமான அர்ப்பணிப்புடன், SLT-MOBITEL இனால் சூழலுக்கு நட்பான செயன்முறைகள் ஊக்குவிக்கப்படுவதுடன், தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களையும் இவற்றுடன் இணைந்து கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றது. எதிர்காலத் தலைமுறையினருக்கு நிலைபேறான எதிர்காலத்தை உருவாக்குவது தொடர்பில் SLT-MOBITEL அதிகளவு அக்கறை கொண்டிருப்பதுடன், சூழல் நிலைபேறாண்மையை ஊக்குவிப்பது தொடர்பான வினைத்திறனான தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் காலநிலை மாற்றத்தை தணிப்பது போன்றவற்றிலும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

'கொம்பேங்க் டிஜிட்டல்'

# ஒரு மில்லியன் வாடிக்கையாளர்கள் பதிவு

கொமர்ஷல் வங்கி, அதன் டிஜிட்டல் வங்கித்துறை கட்டமைப்பான கொம்பேங்க் டிஜிட்டல் சேவையில் ஒரு மில்லியன் பதிவு செய்யப்பட்ட பயனாளிகள் என்ற இலக்கை எய்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சகலவிதமான இணையவழி மற்றும் நடமாடும் வங்கிச் சேவைகளையும் பிரத்தியேகமான கட்டமைப்பில் ஒருங்கிணைத்துள்ள கொம்பேங்க் டிஜிட்டல், மிகவும் பொறுப்புவாய்ந்த இணைய பிரயோகங்கள், மூன்று நடமாடும் பிரயோகங்கள் (IOS> அன்ட்ரோயிட் மற்றும் ஹுவாவி) மூலமாக டெஸ்க்டொப் கணினிகள், லெப்டொப் கணனிகள், டெப்லட்கள் மற்றும் ஸ்மார்ட் போன்கள் என எல்லா கருவிகள் ஊடாகவும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது.

'இந்த தங்குதடையற்ற பரிமாற்றங்கள் மூலம் எமது வாடிக்கையாளர்கள் பலர் டிஜிட்டல் வங்கிச் சேவைகளை அடைந்து கொள்வதால் நாம் மிகவும் உற்சாகம் அடைந்துள்ளோம்' என்று கொமர்ஷல் வங்கியின் பிரதான செயற்பாட்டு அதிகாரி எஸ். பிரபாகர் கூறினார். 'டிஜிட்டல் வங்கிச் சேவையை பாதுகாப்பானதாகவும் விரிவானதாகவும், நம்பத் தகுந்ததாகவும், பாவனைக்கு இலகுவானதாகவும் ஆக்குவதற்கு வங்கி கணிசமான முதலீடுகளை செய்துள்ளது. தொழில்நுட்பம் புத்தாக்க ஊக்குவிப்பு என்பனவற்றை இலங்கை போன்ற ஒரு சந்தையில் காணக்கிடைத்துள்ளமை பற்றியும் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். காரணம் இணையவழியுடனான பரிச்சயம் மொபைல் வங்கிச் சேவை என்பன இங்கு இன்னமும் சமமற்ற நிலையிலேயே இருக்கின்றன' என்று அவர் மேலும் கூறினார்.



'மேம்படுத்தல்கள் பற்றிய வியப்பூட்டும் வரைபுகள் எம்மிடம் உள்ளன. மிக அண்மைய காலத்துக்குரிய பண்புகள் மேம்படுத்தல் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எமது சில்லறை, நுண் மற்றும் நடுத்தர, கூட்டாண்மை வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான அனுபவங்களை வழங்கக் கூடிய சேவைகளும் உள்ளன. கொம்பேங்க் டிஜிட்டல் மீது வாடிக்கையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நாம் நன்றி கூறுகின்றோம்' என்று பிரபாகர் மேலும் தெரிவித்தார்.

கொம்பேங்க் டிஜிட்டலுக்கான சுய பதிவை வாடிக்கையாளர்கள் அனுபவித்து வருகின்றனர், தொழில்துறை மட்டத்திலான பாதுகாப்பு வழிமுறைகளுடன் கூடிய வசதியான பாதுகாப்பையும் இலகுவான செயற்பாட்டையும் வருடம் தோறும் 24 மணிநேரமும் பெற்றுக் கொள்ளக் கூடிய வங்கிச் சேவை வசதிகளை, உலகின் எந்த ஒரு இடத்தில் இருந்தேனும் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில் இந்த டிஜிட்டல் வங்கிச் சேவைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

கொமர்ஷல் வங்கியில் கணக்கு வைத்துள்ள எவரும் இதுவரை கொம்பேங்க் டிஜிட்டலுடன் பதிவு செய்திராதபட்சத்தில் இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் அவர்கள் தங்களை இணையவழி ஊடாக பதிவு செய்து கொள்ளலாம். முதலாண்டுக்கான வருடாந்த கட்டணமும் இணைவுக் கட்டணமும் அறவிடப்பட மாட்டாது என வங்கி அறிவித்துள்ளது.

மணிப்பூர்

இரண்டு பெண்களை நிர்வாணமாக்கி ஊர்வலம்

# குற்றவாளிகளுக்கு மரண தண்டனை பெற்றுத்தருவேன்

## மணிப்பூர் முதல்வர் உறுதி

மணிப்பூரில் குகி பழங்குடி இன சமூகத்தைச் சேர்ந்த இரு பெண்களை, கடந்த மே மாதம் ஆடையின்றி ஊர்வலமாக அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் நாடு முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை கூறியுள்ள நிலையில், அவர்களுக்கு மரண தண்டனை பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும் என அம்மாநில முதலமைச்சர் பிரேன் சிங் கூறியுள்ளார்.



இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில் வசிக்கும் மெய்தி இனத்தவர் தங்களை பட்டியல் இனத்தில் சேர்க்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். இதற்கு குகி பழங்குடி இன மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக கடந்த மே மாதம் ஏற்பட்ட கவலரம் தற்போது வரை நீடிக்கிறது.

இந்த நிலையில் இம்பாலில் இருந்து சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள காங்போக்பி மாவட்டத்தில், குகி பழங்குடியினத்தைச் சேர்ந்த 2 பெண்களை, சிலர் சாலையில் நிர்வாணமாக இழுத்துச் சென்ற வீடியோ தற்போது வெளியாகி நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. மனித குலத்தை வெட்கி தலைகுனியச் செய்யும் இந்த கொடூர சம்பவம் மே 4 ஆம் திகதி நடந்ததாகவும் அதன் வீடியோ தற்போது வெளியாகி உள்ளதாகவும் பழங்குடியின அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கு கண்டனம் தெரிவித்துள்ள அம்மாநில முதலமைச்சர் பிரேன் சிங், இது மனித குலத்திற்கு எதிரான குற்றம் என்றும் உண்மை குற்றவாளி கண்டறியப்பட்டால், அவர்களுக்கு மரண தண்டனை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில், இந்த சம்பவத்துக்கு கடுமையான எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தமிழகம்

# பஸ் பிரேக்கால் சாரதி பணிநீக்கம்



தமிழக அரசு போக்குவரத்து கழகத்தின் கீழுள்ள பேருந்து ஒன்று திருநெல்வேலி - நாகர்கோவில் வழித்தடத்தில் இயக்கப்பட்டு வருகிறது. அதன் சாரதி கடந்த ஒன்றரை ஆண்டுகளாக அதே பேருந்தில் பணியாற்றி வருகின்றார்.

இந்தநிலையில் இந்த பேருந்து பழுதாகி கடந்த சில நாட்களாக பாதி வழியிலேயே நின்று விடுகின்றது. இதுதொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு சாரதி கொண்டுவந்துள்ளார். எனினும், அதிகாரிகள் பழுதை நீக்க முன்வரவில்லை.

ஒருநாள் திடீரென பிரேக் பிடிக்கவில்லை. இதனால் கடுப்படைந்த சாரதி, அந்த பேருந்தை போக்குவரத்து அலுவலகம் முன்பு நிறுத்திவிட்டார். அங்கிருந்த அதிகாரியிடம் பேருந்தின் நிலை குறித்து புகார் கொடுத்துள்ளார்.

பேருந்து இயல்பாகவே இருப்பதாகவும், எந்தக் காரணமும் இல்லாமல் பேருந்தை நிறுத்திவிட்டு சென்றுள்ளார் எனத் தெரிவித்து, சாரதியை பணிநீக்கம் செய்து கடிதம் கொடுத்துள்ளனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பீகார்

# பெப்ரவரி 30ஐ கண்டு கொந்தளித்த பெற்றோர்



பாடசாலை ஆவணங்களில் நம்முடைய பெயர் எழுத்துக்கள் பிழையாக இருக்கக்கூடும், சில சமயம் பெயரின் பிறந்த திகதியோ அல்லது வருடமோ முன்பின் மாறியிருக்கக் கூடும். ஆனால் பீகார் பாடசாலை ஒன்றில், நாட்காட்டியில் இல்லாத திகதியை பிடித்து மாணவனின் பிறந்த திகதியாக மாணவனின் ஆவணமொன்றில் பதிவிட்ட சம்பவம் அரங்கேறியுள்ளது.

மாணவனின் பிறந்த திகதியை பெப்ரவரி 30 என ஆவணத்தில் பதிவிட்டு கொடுத்துள்ள இந்த சம்பவம் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற பிறகு இடமாற்றச் சான்றிதழ் அளிக்கப்பட்டது, அதில் அமன் குமாரின் பிறந்த திகதி 30 பிப்ரவரி 2009 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்தில் மொத்தமே 28 அல்லது 29 நாட்கள் தான் வரக்கூடும், ஆனால் நாட்காட்டியில் இல்லாத ஒரு திகதியை சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், கடும் கொந்தளிப்பில் அவரது பெற்றோர் இருக்கின்றனர்.


நியூயோர்க்

ஏஐ தொழில்நுட்பத்தால்

# மனித சமூகத்துக்கு உளவியல் பாதிப்பு

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயங்கரவாத அமைப்புகள் பயன்படுத்தும்போது நம்மால் கற்பனை செய்ய முடியாத ஆழமான உளவியல் பாதிப்புகள் ஏற்படும் என்று ஐ.நா. பொதுச் செயலாளர் ஆண்டோனியா குத்தரேஸ் எச்சரித்துள்ளார்.

உலக நாடுகளில் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் நன்மை, தீமைகள் பற்றிய விவாதங்கள் அதிகரித்து வருகின்றன. இதனை கவனத்தில் கொண்டு இது தொடர்பான விவாதக் கூட்டங்களை ஐக்கிய நாடுகள் சபை கடந்த சில மாதங்களாகவே நடத்தி வருகிறது.




ஆலோசனை கூட்டத்தின் முடிவில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் ஆண்டோனியா குத்தரேஸ் பேசும்போது, “செயற்கை நுண்ணறிவினால் இயக்கப்படும் சைபர் தாக்குதல்கள் ஏற்கெனவே ஐ.நா.வின் அமைதி மற்றும் மனிதாபிமான நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டிருப்பதாக நான் கருதுகிறேன்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பயங்கரவாத அமைப்புகள் பயன்படுத்தும்போது, நம்மால் கற்பனை செய்ய முடியாத ஆழமான உளவியல் பாதிப்புகள் ஏற்படும். இதில், உயிர் சேதங்களும் ஏற்படும். செயற்கை நுண்ணறிவு - சாட் ஜிடிபி போன்ற தொழில்நுட்பங்கள் மூலம் உருவாக்கப்படும் செய்திகள், உருவங்கள், படங்கள் தவறான தகவல் மற்றும் வெறுப்பை பரப்பி மனித செயல்பாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றார்.

நியூயோர்க்

# காதலர்கள் வாடகைக்கு



உலக அளவில் காதலும், திருமணமும் ஒவ்வொரு தன்மையைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு நாட்டு கலாசாரமும் தங்கள் இயல்புக்கு ஒத்த காதலையும், திருமண நடைமுறையையும் கொண்டுள்ளன. ஆனால், எல்லா நாட்டிலும் இளைஞர்கள் காதலை தேடி அலைவது என்பது இயல்பான ஒன்றாகதான் உள்ளது. பதின்பருவத்தை எட்டும் இளைஞர்கள், யுவதிகள் காதல் வேட்கை கொண்டு அலைகின்றனர்.


இந்தநிலையில், இளைஞர்களுக்காக ஜப்பான் அரசு புதிய திட்டத்தைக் கொண்டுவந்துள்ளது. ஜப்பானில் ஏராளமான இளைஞர்கள், இணை கிடைக்காமல் மனதளவில் சோர்வடைந்துள்ளனர். இதனால், காதலர்களை வாடகைக்கு எடுத்துக் கொள்ளும் திட்டத்திற்கு அந்நாட்டு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அதாவது ஒரு மணிநேரத்திற்கு 3,000 ரூபாய்க்கு காதலர்களை வாடகைக்கு எடுத்துக் கொள்ளலாமாம். ஆனால், குறைந்தபட்சம் 2 மணிநேரத்திற்கு அவர்களை வாடகைக்கு எடுக்க வேண்டும். அதுமட்டுமின்றி இணையை தேர்வு செய்யும் இணையதளத்திற்கு முன்பணமும் செலுத்த வேண்டும்.

எனவே, சிங்கல்ஸ் தான் கெத்து என்று, வெளியில் சொல்லிக் கொண்டு உள்ளுக்குள் குமுறும் இளைஞர்கள், காதல் தெய்வமாக கருதப்படும் க்யூபிட்டிற்கு காத்திருக்காமல், ஜப்பானுக்கு விமானத்தில் ஏறுங்கள். காசிருந்தால் போதும், காதலர்களுடன் உல்லாசமாக காலத்தை கழிக்கலாம்.

நியூயோர்க்

# கடலில் சிக்கி 2 மாதங்கள்: உயிர்பிழைத்த அதிசயம்



பசிபிக் பெருங்கடலில் கடலில் செல்லப்பிராணியுடன் சாகச பயணம் மேற்கொண்டு காணாமல் போன நபர், இரண்டு மாதங்களுக்கு பிறகு உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

தன்னம்பிக்கையுடன் மீண்டு வந்திருக்கிறார் டிம் ஷாடாக். 51 வயதான இவர் தனது செல்லப்பிராணி பெல்லாவுடன் மெக்சிகோ நகரமான லா பாசிலிருந்து தனது சிறிய படகில் கடல் பயணத்தை தொடங்கியிருக்கிறார். பசிபிக் பெருங்கடலில் 6000 கிலோ மீற்றர் தூரம் பயணித்து பிரான்சின் பாலினெசியா தீவை அடைய வேண்டும் என்பது அவரின் திட்டம்.

ஆனால், தீவிர கடல் சீற்றத்தில் சிக்கி அவரின் படகு கடும் சேதமடைந்தது. மேலும் அதில் இருந்த தகவல் தொடர்பு சாதனங்களும் பழுதாகின. கையிருப்பில் இருந்த உணவையும் நீரையும் வைத்து இருவரும் சில நாட்களை கடத்தியுள்ளனர். நாட்கள் செல்ல செல்ல நிலைமை மோசமானதால், அவரும் அவரது நாயும் மழை நீரை சேமித்து குடித்தும், மீன்களை பிடித்து உண்டும் உயிர் பிழைத்துள்ளனர்.

பின்னர் மீனவர்களின் கண்களில் பட்டதால் மீட்பு குழுவினரின் உதவியுடன் அவர்கள் மீட்கப்பட்டனர். கரை திரும்பிய டிம்மை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் உடல் நிலை சீராக இருப்பதாக தெரிவித்தனர்.



முதலாவது டெஸ்டில்

# இலங்கையை வென்ற பாகிஸ்தான்

இலங்கைக்கு எதிரான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், காலியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து நேற்று முடிவுக்கு வந்த முதலாவது போட்டியை பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

இலங்கை: 312/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 122, அஞ்சலோ மத்தியூஸ் 64, சதீர சமரவிக்கிரம 36, திமுத் கருணாரத்ன 29 ஓட்டங்கள். பந்துவீச்சு: அப்ரார் அஹ்மட் 3/68, ஷகீன் ஷா அஃப்ரிடி 3/86, நசீம் ஷா 3/90, அக்ஹா சல்மான் 1/18)

பாகிஸ்தான்: 461/10 (துடுப்பாட்டம்: செளட் ஷகீல் ஆ.இ 208, அக்ஹா சல்மான் 83, ஷண் மசூட் 39, நௌமன் அலி 25 ஓட்டங்கள். பந்துவீச்சு: ரமேஷ் மென்டிஸ் 5/136, பிரபாத் ஜெயசூரிய 3/145, விஷ்வ பெர்ணாண்டோ 1/69, கசுன் ராஜித 1/77)

இலங்கை: 279/10 (துடுப்பாட்டம்: தனஞ்சய டி சில்வா 82, நிஷான் மதுஷ்க 52, ரமேஷ் மென்டிஸ் 42, தினேஷ் சந்திமால் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: அப்ரார் அஹ்மட் 3/68, நௌமன் அலி 3/75, அக்ஹா சல்மான் 2/39, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/64)

பாகிஸ்தான்: 133/6 (துடுப்பாட்டம்: இமாம்-உல்-ஹக் ஆ.இ 50, செளட் ஷகீல் 30, பாபர் அஸாம் 24 ஓட்டங்கள். பந்துவீச்சு: பிரபாத் ஜெயசூரிய 4/56, ரமேஷ் மென்டிஸ் 1/62)

போட்டியின் நாயகன்: செளட் ஷகீல்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# இன்று மோதும் டி.எஸ், சென். தோமஸ்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், ஹவ்லொக் பார்க்கில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் டி.எஸ் சேனநாயக்க கல்லூரியும் சென். தோமஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

நாளை நடைபெறவுள்ள போட்டியில் வெஸ்லிக் கல்லூரியை இசிப்பத்தன கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இந்நிலையில், தமது மைதானத்தில் நடைபெறவுள்ள போட்டியில் விஞ்ஞானக் கல்லூரியை சென். பீற்றர்ஸ் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

பல்லேகலவில் நடைபெறவுள்ள போட்டியில் திருத்துவக் கல்லூரியை றோயல் கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

இதேவேளை, நாளை மறுதினம் நடைபெறவுள்ள போட்டியில் கிங்ஸ்வூட் கல்லூரியும், சென். அந்தனிஸ் கல்லூரியும் மோதவுள்ளன.


போகம்பரவில் நடைபெறவுள்ள போட்டியில் வித்தியார்த கல்லூரியை சாஹிரா கல்லூரி எதிர்கொள்ளவுள்ளது.

நடுவர் தெரிவுப் பரீட்சையில்

# கல்முனை சாஹிரா ஆசிரியர் இருவர் சித்தி

**அஸ்ஹர் இப்றாஹிம்**





இலங்கை கிரிக்கெட் சபையால் நடாத்தப்பட்ட கிரிக்கட் நடுவர்களுக்கான தெரிவுப் பரீட்சையில் கல்முனை சாஹிரா தேசியக் கல்லூரி ஆசிரியர்களான-ரீ.எஸ். அஜ்மல் ஹுசைன், எம்.எப்.எம். றிஸ்வி ஹாதிம் ஆகியோர் சித்தியடைந்துள்ளனர்.

ஹுசைன் 89, ஹாதிம் 88.5 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை ரீதியில் முறையே எட்டாம், ஒன்பதாமிடங்களைப் பெற்றுள்ளனர்.

# குவாரடோவைக் கைச்சாத்திட்ட இன்டர் மிலன்



இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஜுவென்டஸின் முன்னாள் முன்களவீரரான ஜுவான் குவாரடோவை ஓராண்டு ஒப்பந்தத்தில் இன்னொரு சீரி ஏ கழகமான இன்டர் மிலன் கைச்சாத்திட்டுள்ளது.

ஜுவென்டஸில் எட்டு ஆண்டுகள் இருந்த பின்னர் அங்கிருந்து விலகிய 35 வயதான குவாராடோ, 11 கிண்ணங்களை வென்றிருந்தார்.

# நியூசிலாந்துக் குழாமில் கைல் ஜேமிஸன்



ஐக்கிய அரபு அமீரகம், இங்கிலாந்துக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடருக்கான நியூசிலாந்துக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் கைல் ஜேமிஸன் இடம்பெற்றுள்ளார்.

இந்நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கெதிரான தொடரில் பின் அலென், டெவோன் கொன்வே, மற் ஹென்றி, அடம் மில்ன், டரைல் மிற்செல், கிளென் பிலிப்ஸ், இஷ் சோதி ஆகியோர் பங்கேற்காத நிலையில், இங்கிலாந்துக்கெரான தொடரில் திரும்புகின்றனர். குழாம்: டிம் சௌதி (அணித்தலைவர்), பின் அலென், அதி அஷோக், சட் போவ்ஸ், மார்க் சப்மன், டேன் கிளவர், டெவோன் கொன்வே, லொக்கி பெர்கியூசன், டீன் பொக்ஸ்குறொஃப்ட், மற் ஹென்றி, கைல் ஜேமிஸன், கோல் மக்னோச்சி, அடம் மில்ன், டரைல் மிற்செல், ஜிம்மி நீஷம், கிளென் பிலிப்ஸ், றஷின் றவீந்திரா, மிற்செல் சான்ட்னெர், டிம் செய்ஃபேர்ட், ஹென்றி ஷிப்லி, இஷ் சோதி, வில் யங்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 21 ஜுலை 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.